BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# மின்சாரத்தில் இயங்கும் இருசக்கர வாகனத்திற்கான (E-Scooter) முன்னோடி நிகழ்ச்சித் திட்டத்தை ப்ராம்ப்ட்டன் நகரம் துவக்குகிறது

*நிகழ்ச்சித் திட்டமானது முழுமையான செயல்பாடுமிக்க போக்குவரத்து முறை ஒன்றைக் கட்டமைப்பதற்கும், சமுதாயத்தினரை இணைப்பதற்கும் பங்களிக்கும்*

ப்ராம்ப்ட்டன், ON (ஏப்ரல் 6, 2023) - ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, நியூரான் மொபிலிட்டி (Neuron Mobility), பர்ட் கனடா (Bird Canada) மற்று ஸ்கூட்டி மொபிலிட்டி (Scooty Mobility) ஆகிய நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்து, நகரின் முன்னெப்போதுமில்லாத, முதலாவது மின்சாரத்தில் இயங்கும் இருசக்கர வாகன (E-scooter) திட்டத்தைத் துவக்குகிறது.

ப்ராம்ப்ட்டன் நகரம் முழுவதும் 750 ஸ்கூட்டர்கள் வரை பொது மக்கள் உபயோகிப்பதற்காக கிடைக்கும்.

பயனர்கள் பூட்டப்பட்ட E-ஸ்கூட்டரை அணுகி, QR குறியீட்டை ஸ்கேன் செய்து, செயலியைப் பதிவிறக்குவதன்பேரில் கூறப்படும் சேவை  வழங்குனரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, அதன் பூட்டினைத் திறந்து சவாரி செய்யலாம், இதன் மூலம் மற்றொரு நிலைத்துநிற்கவல்ல செயல்பாடு மிக்க போக்குவரத்துக்கான விருப்பதெரிவாக குடியிருப்பாளர்கள் தங்களை இணைத்துக் கொள்ளலாம். இ-ஸ்கூட்டர்கள் மணிக்கு 50 கிமீ அல்லது அதற்கும் குறைவான வேகத்திலேயே, வேக வரம்பு குறிக்கப்பட்ட சாலைகளில், சைக்கிள் ஓட்டும் பாதைகளில் மற்றும் பன்முகப் பயன்பாட்டு பாதைகளில் பயணிக்கலாம் மற்றும் ஒரு மணி நேரத்தில் 20 கிமீ தூரம் வரை பயணிக்கலாம்;  புவியியல் வேலி (ஜியோ-ஃபென்ஸ்) மூலம் அதிகபட்ச வேகத்தை 15 கிமீ/மணிக்கு என்ற அளவில் குறைக்கலாம். குறிப்பிட்ட இடங்களில். அவற்றை நடைபாதைகளில் பயன்படுத்தப்படலாகாது. சவாரி செய்யத் தடை விதிக்கப்பட்ட பகுதிக்கு ஒரு இ-ஸ்கூட்டரை ஓட்டிச் சென்றால், வாகனம் தானாகவே மெதுமெதுவாக நிறுத்தப்பட்டு, அனுமதிக்கப்பட்ட பகுதிக்கு மாறிச் செல்ல வேண்டும் என்ற அறிவிப்பு பயனருக்கு தெரிவிக்கப்படும்.

ப்ராம்ப்ட்டன் நகரம் நிர்வாகமானது, செயல்பாடு மிக்க போக்குவரத்து நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கிறது; அத்துடன் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்ட சமூகங்களைக் கட்டமைப்பதற்கான முயற்சியிலும்  ஈடுபடுகிறது, அனைத்து தெருக்களுடனும் ஒருங்கிணைக்கப்பட்ட ஆரோக்கியமான செயலூக்கமுள்ள போக்குவரத்து வலையமைப்பை உருவாக்க முனைகிறது.

ஜனவரி 2021 இல், மாகாணம் ஐந்தாண்டு காலத்திற்கான மின்சார கிக்-ஸ்கூட்டர் முன்னோடித் திட்டத்தைத் தொடங்கியது, இது நகராட்சிகள் மின்சார ஸ்கூட்டர்களின் (இ-ஸ்கூட்டர்களின்) பயன்பாட்டை ஒழுங்குபடுத்த உதவியது. செயல்பாடுமிக்க போக்குவரத்துத் தூணாக, மின்சாரத்தில் இயங்கும் E-ஸ்கூட்டர் திட்டம் குடியிருப்பாளர்களை சமூகங்கள், சேவைகள் மற்றும் வணிகங்களுடன் டவுண்டவுன் மத்திய பகுதி மற்றும் ப்ராம்ப்ட்டன் முழுவதும் உள்ள புற நகர்ப் பகுதிகளையும் இணைக்கும்.

ஆக்டிவ் டிரான்ஸ்போர்ட்டேஷன் என்பது தனி ஒருவரின் வாகனப் பயணங்களைக் குறைப்பதற்கும், சமூக வடிவமைப்பு மற்றும் பொது சுகாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் இதுவரை பயன்படுத்தப்படாத மிகப் பெரிய வாய்ப்புகளில் ஒன்றாகும். இ-ஸ்கூட்டர் திட்டம் என்பது ப்ராம்ப்ட்டன் நகரம் ஒரு விரிவான செயலூக்கமுள்ள போக்குவரத்து வலைப்பின்னலை உருவாக்குவதற்கான ஒரு வழியாகும்.

செயலூக்கமுள்ள போக்குவரத்துக்கான மாஸ்டர் திட்டம் [Active Transportation Master Plan (ATMP)] என்பது வலைப்பின்னலுக்கான திட்டம், கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சி நிரல்களை வழங்குகிறது; இது, ப்ராம்ப்ட்டன் நகரில் பாதுகாப்பான, ஒருங்கிணைக்கப்பட்ட போக்குவரத்துக்கான தெரிவுகளை வழங்கும் வகையில் ப்ராம்ப்ட்டன் நகரின் 2040 ஆண்டிற்கான தொலைநோக்குப் பார்வைக்கு உதவுகிறது; இதனால் பொதுமக்கள் நடப்பது, மிதிவண்டி ஓட்டுவது மற்றும் நகரில் பயணிப்பது ஆகியவற்றுக்கு நிலைத்துநிற்கும் வகையில் பங்களிக்கிறது.

நகர நிர்வாகமானது escooters@brampton.ca மூலமாக குடிமக்களின் பின்னூட்டக்கருத்துக்களை கண்காணித்துவரும். மேலும் தகவல்களுக்கு வருகை புரியவும்: www.brampton.ca/escooters.

**முக்கிய லின்குகள்:**

- பர்ட் மைக்ரோ-எலெக்ரிக் மொபிலிட்டி(Bird Micro-Electric Mobility):நகரங்களுக்கான மின்சார பைக்குகள் மற்றும் ஸ்கூட்டர்கள்
- நியூரான் மொபிலிட்டி (*Neuron Mobility): பாதுகாப்பு-முன்னணி இ-ஸ்கூட்டர் மற்றும் இ-பைக் ஆபரேட்டர் (rideneuron.com)
- ஸ்கூட்டிSCOOTY | Ridesharing, மின்சார ஸ்கூட்டர்கள், மின்சார பைக்குகள், உதிரிபாகங்கள் ஆன்லைன் கடை (ridescooty.com)
- ப்ராம்ப்ட்டன் நகரில் மிதிவண்டிகள் ஓட்டுவதற்கான பாதைகளின் நிலவரைபடம்

**அறிஞர் கூற்றுகள்**

“அணுகக்கூடிய வகையிலன மற்றும் செயல்பாடுமிக்க போக்குவரத்து விருப்பத்தெரிவுகளை வழங்குவதே நகர நிர்வாகத்தின் முன்னுரிமை கொண்ட விஷயமாகும், மேலும் இந்த முன்னோடித் திட்டம் அதை நாங்கள் செய்வதற்கான ஒரு வழியாகும். ப்ராம்ப்ட்டன் குடியிருப்பாளர்கள் மற்றும் நகருக்கு வருகை தருபவர்களுக்கு வாய்ப்புகளை அதிகரிக்க எங்கள் கூட்டாளர்களுடன் இணைந்து பணியாற்றுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எங்கள் நகரத்தை, மாற்றம் செய்யப்பட்ட மிகவும் பிரமிக்கத் தக்கதாக உள்ள இடங்களுடன் மக்களை இணைக்கிறோம், இன்னும் வலுவான சமூக உணர்வை கட்டமைக்கிறோம்.”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயஎ, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“எங்கள் இ-ஸ்கூட்டர் சேவை இப்போது ப்ராம்ப்ட்டன் நகரில் கிடைக்கிறது என்பதை அறிவிப்பதில் SCOOTY நிறுவனம் மகிழ்ச்சி அடைகிறது. இ-ஸ்கூட்டர் துறையில் கனடா நாட்டுக்கு செவிசாய்க்கும் வகையில் ப்ராம்ப்ட்டனை தளமாகக் கொண்ட மைக்ரோமொபிலிட்டி (குறுகியதூரப் பயணம்) நிறுவனமாக இருப்பதில் SCOOTY பெருமை கொள்கிறது. கூட்டாண்மை அடிப்படையிலான மைக்ரோமொபிலிட்டி என்ற எங்கள் கருத்தை 2019 ஆம் ஆண்டில் ப்ராம்ப்ட்டன் நகரத்திற்குக் கொண்டு வந்தோம், மேலும் 2020 ஆம் ஆண்டில் எங்கள் முதலாவது முன்னோடித் திட்டத்தை அந்த நகரத்தில் வைத்து இயக்கினோம். குடியிருப்பாளர்கள் மற்றும் நகருக்கு வருபவர்கள் இடம் விட்டு இடம் செல்லவும் மற்றும் பயணிக்கவுமான இலக்கை நிறைவேற்ற, SCOOTY மீண்டும் ப்ராம்ப்ட்டனுக்கு வந்துள்ளது. ப்ராம்ப்ட்டனில் உள்ள இடம் விட்டு இடம் பெயர்தலுக்கன எதிர்காலம் மல்டிமாடல் (பலவகை பயண வாகனங்கள்) ஆகும், மேலும் அந்த ஒவ்வொரு பயணங்களையும் உங்களுக்காக எளிதாக்கவே நாங்கள் இங்கே இருக்கிறோம்.”

- ஷொயப் அஹமத், நிறுவனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி*(CEO), SCOOTY*

" நாங்கள் முதன்முதலில் பேர்டை(Bird) கனடாவுக்குக் கொண்டு வந்ததிலிருந்து, தங்கள் நகரங்களில் சுற்றிச் சுற்றிச் செல்வதற்கு நம்பகமான, மலிவான மற்றும் நிலைத்து நிற்கவல்ல வழியாக இ-ஸ்கூட்டர்களை, பல மக்களும் சுவீகரிப்பதை நாங்கள் பார்த்திருக்கிறோம்; ப்ராம்ப்ட்டன் ஒரு துடிப்பான சமூகம் - அதன் ஒரு பகுதியாக. மைக்ரோமொபிலிட்டி திட்டத்தை இங்கே பகிர்ந்துள்ளோம் என்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். ப்ராம்ப்ட்டனின் அனைத்துத் தலைவர்களின் சிந்தனைமிக்க மற்றும் ஒத்துழைப்பான அணுகுமுறைக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்."

*- ஸ்டூவர்ட் லையான்ஸ், தலைவர், பேர்ட் (Bird)*

“பாதுகாப்பான, புத்திசாலித்தனமான மற்றும் நிலைத்து நிற்கவல்ல பிரயாண விருப்பத்தெரிவுகளுக்கான கூடுதல் அணுகல் மூலம், சமூகத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த ப்ராம்ப்ட்டன் நகரத்துடன் கூட்டு சேர நாங்கள் எதிர்நோக்குகிறோம். பாதுகாப்பு என்பது நியூரான் (Neuron) நிறுவனத்தில், நாங்கள்

முன்னுரிமை கொண்டிருக்கிற விஷயமாகும், இது எங்கள் இ-ஸ்கூட்டர் வடிவமைப்பு மீதும், அவற்றை இயக்கும் விதத்தின் மீதும் கோலோச்சுகிறது. எங்களின் இ-ஸ்கூட்டர்களில் அதிநவீன பாதுகாப்பு அம்சங்களை நிரப்பி வைத்திருக்கிறோம்; மற்ற நகரங்களில் பெற்ற அனுபவத்தின் மூலம் இதை ஓட்டுபவர்கள் மிகவும் பாராட்டுகிறார்கள் என்பதை நாங்கள் அறிவோம். இந்த இ-ஸ்கூட்டர்கள் நகரத்திற்குப் புதியதாக வந்திருப்பதால், பல முதன்மைகள் இருக்க வாய்ப்புள்ளது, எனவே சவாரி-விதிகளை வலுப்படுத்த நேரம் ஒதுக்க விரும்புகிறோம். எதிர்கால சவாரிகளுக்கான இலவச கிரெடிட் சலுகைகளைப் பெற, எங்கள் ஆன்லைன் ஸ்கூட்சேஃப் அகாடமி (ScootSafe Academy) யைப் பார்வையிட சவாரி செய்பவர்கள் (ரைடர்கள்) வரவேற்கப்படுகிறார்கள். அனைத்து ரைடர்களும் மது அருந்திவிட்டு சவாரி செய்ய வேண்டாம் எனவும், பொறுப்புடன் வாகனங்களை நிறுத்துங்கள் எனவும் மற்றும் எங்கள் இ-ஸ்கூட்டர்களில் வழங்கப்படும் ஹெல்மெட் மூலம் தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் நாங்கள் நினைவூட்ட விரும்புகிறோம்."

- அன்குஷ் கார்வால், *நியூரான் மொபிலிட்டி (Neuron Mobility) நிறுவனத்தில் கனடாவுக்கான சந்தைக்கு தலைவர்*

-30-

As one of the fastest-growing cities in Canada, Brampton is home to 700,000 people and 75,000 businesses. People are at the heart of everything we do. We are energized by our diverse communities, we attract investment, and we are embarking on a journey to lead technological and environmental innovation. We partner for progress to build a healthy city that is safe, sustainable, and successful. Connect with us on Twitter, Facebook, and Instagram. Learn more at www.brampton.ca

**MEDIA CONTACT**
City of Brampton Multicultural Media
multiculturalmedia@brampton.ca